மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி உற்பத்தியைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறை. ஆனால் இதற்காக ஆலை அமைப்பது, ஏற்படுத்துவது தனித் துறை.

திரு. மு. அண்ணாமலை : தலைவர் அவர்களே, தரமான பருத்தியை தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு, இதிலே ஏற்பட்ட நோயையும் கட்டுப்படுத்தியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டு அதிகப்படியான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான அலுவலகங்களிலே வாங்கிய விதைகளிலேகூட சரியான முளை விடவில்லை. இதைப் பரிசீலிப்பதற்கும், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கும். தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விதைகளைப் பொறுத்த அளவில், நல்ல விதைகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, விதைச் சான்றிதழ் இயக்ககம் ஒன்று துவக்கப்பட்டது இந்த ஆண்டிலிருந்து. ஆகவே, நல்ல தரமான விதைகளை வழங்க முடியும். மேலும், உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி இந்த விதைப் பொட்டலங்களிலேயே எவ்வளவு 'ஜெர்மினேஷன்' ஆகும், எவ்வளவு முளைக்கும், எவ்வளவு 'பர்சென்டேஜ்' கிடைக்கும் என்ற விவரங்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள். இதிலே குறைவு இருந்தால், இது போன்ற எண்ணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்வள நிறுவனத்தில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள்.

*வினா எண் 729—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் கால்நடை மருத்துவர்கள் இந்நிறுவனத்தில் பணியில் அமர்ந்து சில மாதங்களுக்குள் மாற்று துறைகளுக்கு (Departments) மாறுதல் கேட்டுப் போவதன் காரணம் என்ன ?

(ஆ) அவர்களுக்கு இந்த நிறுவனத்தில் பதவி உயர்வு இல்லையா ?

(இ) இந்த நிறுவனத்தில் சேர்ந்து, இந்த நிறுவனத்திலேயே தொடர்ந்து பணியாற்ற அரசு பரிசீலனை ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் அரசு நிறுவனம் என்பதிலிருந்து கூட்டுறவு இணையமாக மாறும் ஒரு நிலை உருவாகியிருப்பதாலும், அரசுத் துறை நிறுவனங்களுக்கு அரசுப் பணியில் இவ்வளவு காலமிருந்து, நிறுவனங்களில் பணியில் சேருவதற்கான ஈட்டு ஊதியம் (Terminal Benefits) வழங்குவதில் முடிவு ஏதும் எடுக்கப்படாததாலும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணி புரியும் கால்நடை உதவி மருத்து வர்கள் சிலர் அரசுத் துறைகளில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக் கும்போது சென்று விட விரும்புகின்றனர் என்பது தெரிய வருகிறது.

(ஆ) பதவி உயர்வு பெறுவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

(இ) அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த பால்வளத் துறையிலே ஒரு மாவட்டத்திற்கு ஒரு கால்நடை அதிகாரி தான் இருக்கிறார். அவர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அவருக்கு வெகிகிள் கிடையாது. ஒரு வாடகைக் காரை எடுத்துக் கொண்டு அவரும், புரொகியூர்மென்ட் ஆபீசரும் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, மாவட்டம் பூராவும் வசதியாகப் போக முடியவில்லை. எனவே, இந்த வெகிகிளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றியம் அமைக்கப்பட்டு வருகிறது. இப்படி ஒன்றியங்கள் அமைக்கப் பட்டு முடிந்தவுடன், அந்தந்த ஒன்றியங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அப்போது அவர்களுக்குத் தேவையான வாகன வசதிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஒன்றியங்கள் அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் இந்த ஒன்றியங்கள் அமைக்கப்பட இருக் கின்றன ? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை ஒன்றியங்கள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பால்வளத் துறையைப் பொறுத்தவரையில் மாவட்டத் திற்கு ஒரு ஒன்றியம்தான் பால் பெருக்குவதற்காக அமைக்கப் படுகிறது. 8 மாவட்டங்களில் ஒன்றியங்கள் அமைக்கும் வேலை கிட்டத்தட்ட முடிந்து விட்டது ; ஒரு ஒன்றியத்திற்குத் தான் இன்னும் முடியவில்லை. ராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர்,

திருநெல்வேலி மாவட்டங்களுக்கு முதன்மை முனைவர் (சீப் புரொமோடர்) நியமிக்கப்படுவர். அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, பின் ஒன்றியங்கள் அமைக்கப்படும். அப்போது இந்த ஒனறியங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அப்போது அவர்களுக்குத் தேவையான வாகன வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுய.

[முற்பகல் 9—30]

திரு. இரா. முத்தையா : சீரமைக்கப்பட்டு வரும் ஒன்றியங்களின்கீழ் இத்தகைய கால்நடை மருத்துவர்களும் ஏனைய பால்வளத்துறை அலுவலர்களும் அந்த ஒன்றியத்தின்கீழ் பணியாற்றக்கூடிய அளவில் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அவர்கள் இந்த ஒன்றியங்களிலோ ஒன்றியங்களின் மையமாக வரக்கூடிய இணையத்திலோ பணியாற்றலாம் என்பதைப் பற்றித்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதில் சங்கடங்கள் இருக்கின்றன, சட்டத்திட்டம் அப்படி இருக்கிறது என்ற வகையிலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கால்நடை மருத்துவர்கள் தொடர்ந்து அங்கேயே பணியாற்றக்கூடிய அளவுக்கு ஏதேனும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சட்டதிட்டங்கள் காரணமாக அங்கு பணிபுரிகிற கால்நடை மருத்துவர்களுக்கு இடர்ப்பாடு இருப்பதாக நான் கூறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்திருக்கிறார். நான் சொன்னது, தமிழ்நாடு பால்வள நிறுவனம் கூட்டுறவு இணையமாக மாற இருக்கிறது. அப்படி வருகிறபோது தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறவர்களுக்கு 'டர்மினல் பெனிபிட்ஸ்' கொடுக்கக்கூடிய வாய்ப்பைக் கொடுத்து இங்கேயே பணிபுரியச் செய்யவேண்டுமெனபதைப் பற்றித்தான் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். இருக்கிற சட்ட திட்டங்கள்படி முழுப் பாதுகாப்பு கால்நடை மருத்துவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. பதவி உயர்வைப் பொறுத்தவரைகூட கால்நடைப் பராமரிப்புத் துறையில் உள்ள வாய்ப்பைவிட தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் அதிக வாய்ப்பு இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: கால்நடை மருத்துவர்கள் கொடிய விலங்குகளுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். பொது மருத்துவம், பல் மருத்துவம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்கும் இவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத் திற்கும் வித்தியாசம் இருப்பது ஏன்? அது நியாயமா? பால் மாடுகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்களை நிர்வகிக்கும் துறை ஒருவரிடமும் பசுப் பராமரிப்புத் துறை ஒருவரிடமும் இருக்கிறது. இரண்டு துறைகளையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க அரசு முயற்சிக்குமா? பாலையும் பசுவையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பால் கொடுக் கிற கால்நடைகளை கொடிய விலங்குகளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா? தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணி புரியக்கூடிய மருத்துவர்களுக்கு பணிப் பாதுகாப்பு, தேவையான ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஈட்டுதியம் தர முடிவு எடுத்துவிட்டால் அவர்கள் அங்கேயே பணியாற்ற விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று தெவித்துக் கொள்கிறேன்.

மாயூரம் வட்டத்தில் சிறு தொழில்கள்.

*வினா எண். 730.— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

1976–77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறுதொழில்களைத் துவங்குவதற்கான உரிமங் கள் எத்தனை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 1976–77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறு தொழில்களைத் துவங்குவதற்காக வழங்கப்பட்ட சான்றி தழ்களின் எண்ணிக்கை மொத்தம் 36.

Post of head nurse in Kallakurichi Hospital

* Q. No. 731—Thiru Durai Muthusamy: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) Whether the Government Order No. 1127, Public Health, dated 27th April 1945 regarding the appointment of head nurse in Government Hospital is still in practice;

(b) If so, such appointment of a head nurse has been made to the Government Hospital, Kallakurichi, South Arcot district, which has provision for 56 beds;

(c) If not why: and

(d) How long is it remaining without such appointment?